GCG2-5-TA

# சீஷராக்க தைரியப்படுங்கள் : விசுவாசிகளை குருத்துவத்தில் நடத்திட செயல்முறை படிகள் - நிகழ்ச்சி 5

**அறிவிப்பாளர்:** எது முக்கியமான காரியமென்று நினைக்கிறீர்கள், முதலாவதாக இயேசு பின்வரும் பகுதிகளான அமெரிக்கா கேனடா மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி ஆப்ரிக்கா, ஆசியா பிலிப்பைன்ஸ் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறார். இயேசு கூறினார், "நீங்கள் போய் சீஷர்களை ஏற்படுத்துங்கள்." சீஷர் என்றால் என்ன? எப்படி சீஷர்களை ஏற்படுத்த முடியும்? இன்றைக்கு எனது விருந்தினரான ராபி கேலட்டி அதை நமக்கு சொல்ல இருக்கிறார், இவர் 3,200 அங்கத்தினர்களை உடைய சபையின் மேய்ப்பராக இருக்கிறார், நான்கு காலை ஆராதனைகள் நடக்கும், இருந்தாலும் தனிப்பட்ட நபராக வருடந்தோறும் ஏழு முதல் எட்டு பேரை சீஷர்களாக உருவாக்குகிறார். அவர்கள், மாறுத்தரமாக, மற்றவர்களை சீஷர்களாக உருவாக்குகிறார்கள். சரி, இதுவரை நீங்கள் யாரையும் சீஷராக உருவாக்காதிருந்தால், இதை செயல்படுத்துவது சாத்தியம் தானா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய செயல்முறை காரியங்கள் என்ன? இன்றைக்கு இந்த ஜான் அன்கெர்பெர்க் சிறப்பு தொகுப்பில் அதை தெரிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு சிறப்பான நிகழ்ச்சி காத்திருக்கிறது. சீஷர்களை உருவாக்குவது எப்படி என்பதை குறித்து பார்த்துகொண்டு வருகிறோம். அதனுடைய நடைமுறைய காரியங்கள்: நீங்க என்ன செய்யணும்? என்ன பேசனும்? இயேசுவின் பிரதான கட்டளை எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. "உலகமெங்கும் புறப்பட்டுபோய்... சீஷர்களை ஏற்படுத்துங்கள். சரியா.ஆனால் இதை ஒருவரும் தங்களுக்கு அப்பியாசப்படுத்துவதில்லை. அவர்கள் எல்லாம், நா ஒரு பாஸ்டர், நா போதகன் அல்ல, நா ஞாயிறு பள்ளியில் ஒருபோதும் வகுப்புகள் எடுத்தது கிடையாது, அதனால பெரியவர்களுக்கு நா போதிக்கும்படி எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்... இன்னொருத்தருக்கு நா போதிக்க முடியுமா? இதுவரைக்கும் நா அப்படி செய்ததே கிடையாது. என்ன சொல்றதுன்னு எனக்கு தெரியாது என்கின்றனர்.

உண்மையாக சொல்கிறேன், உங்களுக்கு சில நடைமுறை காரியங்களை சொல்லி எப்படி எல்லாம் முயற்சித்து , இந்த காரியத்தில் இறங்க முன்வந்து, செல்படுவது என்று பார்க்கலாம். தேவன் உங்களுக்கு உதவிடுவார் உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கை சுவாரஸ்யமானதாக மாறிடும். மிகவும் வல்லமை வாய்ந்ததாக மாறிடும். நீங்கள் கனவிலும் யோசித்திராத விதங்களில் தேவன் உங்கள் மூலமாக கிரியை செய்வதை காண்பீர்கள். நான் கிறிஸ்தவனாக மாறியபோது இயேசுவை நான் புரிந்துகொண்டேன், "உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும்.... சீஷராக்குங்கள்," பள்ளியில் என்னுடைய நண்பர்களை பார்த்து யோசித்து இருக்கிறேன், "என்ன பேசறதுன்னு தெரியலையே. இதுவரைக்கும் இப்படி செய்தது கிடையாது. எனக்கு உண்மையா தெரியல... அதாவது, ஜனங்க எங்கிட்ட ஏதாவது கேள்வி கேட்டா, நா அதுக்கு பதில் சொல்லவே மாட்டேன். அது பெரிய நாசத்தை உண்டாக்குவது போல உணர்ந்தேன். நா ஏ சொல்ல கூடாது என்பதற்கு என்னிடம் பல காரணங்கள் இருந்தது. இறுதியாக நா சொன்னே, ஆண்டவரே, சரி, உங்களுக்கு நா கீழ்படிகிறேன். முயற்சிக்கிறேன். தோல்வியடைந்தால், முயற்சிக்கவாவது செய்கிறேனே. உண்மை என்ன தெரியுமா, தேவன் எனக்கு இதுவரை

உதவிவருகிறார். நீங்க துணிந்து முயற்சித்தால் தேவன் உங்களுக்கு எப்படி உதவிடுவார் என்பதை பற்றி பார்க்க இருக்கிறோம், உதவி செய்வார்.

சரி, நமது தேசத்திலுள்ள பிரசித்தி பெற்ற வேதாகம போதகர்களில் ஒருவரை அழைத்திருக்கிறேன், ராபி கேலட்டி, விருந்தினராக வந்திருக்கிறார். அவருக்கு ப்மிகபெரிய சபை இருக்கிறது, 3200 அங்கத்தினர்களோடு, ஞாயிறுதோறும் நான்கு ஆராதனை நடக்கிறது. இருந்தாலும் இவருடைய, முதல் வேலை, தனிநபர் சீஷத்துவ ஊழியம். கிட்டதட்ட ஏழு, ஏழரை ஆண்டுகளுக்கு மேலாக, நீங்க 30 தனிநபர்களை சீஷர்களாக உருவாக்கியிருக்கிறீர்கள். அவர்களில் பாதிபேர் இப்போது வெளியிடங்களில் இருக்கிறார்கள், அவர்களும் மற்றவரை சீஷத்துவத்தில் நடத்துகிறார்கள், நாம் பார்க்க போகிற காரியங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. இறுதியாக எப்படி நீங்க அவர்களை வெளியில் அனுப்பினீர்கள், சரி, இப்ப நீங்க போய் உங்களை மற்றவர்கள் பிரதிபளிக்கும்படி செய்யும் நேரமென்று எப்ப சொன்னீங்க."

இருந்தாலும், ராபி, உங்களை எப்படி ஒருவர் சீஷத்துவத்தில் நடத்தினார்கள் என்று சொல்லுங்க; அவங்க கேட்டதுனால நீங்க இந்த சீஷத்துவ உறவிற்குள் வருவது எவ்வளவு எளிதாக இருந்தது. இதே மாதிரி அவர்களும் மற்றவர்களை சீஷத்துவ ஐக்கியத்தில் வரும்படி எப்படி அழைப்பு கொடுக்கலாம் என்று சொல்லி ஊக்குவித்திடுங்கள்.

**ராபி கேலட்டி:** நிச்சயமா. இது ரொம்ப எளிமையானது, ஜான். செய்வது ரொம்ப சுலபம். ஜனங்களுக்கு இது ஒத்துவருமா என்று சொல்லி பல விதமான பயமும் நடுக்கமும் நமக்கு இருக்கும். ஆனா நாம கேட்டா போதும் எத்தனை பேர் சரின்னு சொல்றாங்கன்றத பார்த்தா ஆச்சரியமா இருக்கும். நான் சில மாதங்களாக ஜெபித்து கொண்டிருந்தபோது டேவிட் பிளாட் என்னிடத்தில் வந்து என்னிடம் கேட்டார், "ராபி, உனக்கு பைபிள் ஸ்டடில ஆர்வம் இருக்குது இரண்டு பேரும் சேர்ந்து ஜெபிக்கவும் வசனங்களை மனப்பாடமும் செய்யலாமா என்றார். என்னுடைய பதில் சரி என்றிருந்தது. அவர்

கேட்டார், “சரி, அதை குறித்து முதல்ல நாம ஜெபிக்கலாமே? அதற்கு நா சொன்னே, “அதற்கு அவசியமில்லை, ஏற்கனவே ஜெபித்துகொண்டிருக்கிறேன் என்றேன்.”

நாங்க சுமார் ஆறுமாதங்களுக்கு சந்தித்தோம். இன்னொருத்தர் வந்தார், அவருடைய பெயர் டிம் லீப்ளர், அவர் என் வாழ்வில் இடைபட்டார், அவர் என்னை அருமையான சீஷனாக்கினார். இது வேதாகம கட்டளை என்பதை இந்த நபர்கள் எனக்கு எடுத்துரைத்து எனக்கு சவாளிட்டனர், தேவனிடத்தில் வந்த கட்டளை மாத்திரமால், நமக்கே தெரியும் மத்தேயு 28:18-20, புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். இந்த கட்டளை எல்லாருக்கும் பொருந்தும். அதனால நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம். இது ஏதோ சூப்பர் ஊழியர்களுக்கு மட்டுமல்ல, இது சீஷர்களுக்கு மட்டும் சொல்லப்பட்டது கிடையாது, இது எல்லாருக்கும் உரியது, இன்றைக்கும் இது பொருந்தும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. ஜனங்கள் கேட்பதற்கு முன்பு நாமே ஒரு விஷயத்தை சொல்லிட வேண்டும் என்று நினைக்கிறேன், புதிய கிறிஸ்தவராக நீங்களும் ஒன்றுபுரியாமல் இருந்திருக்கிறீர்கள், இல்லையா. நீங்க முன்னும் பின்னுமாக தத்தளிச்சிட்டு இருந்தீங்க, உங்களுக்கு நிச்சயம் ஒரு உதவி தேவையாக இருந்தது, அதாவது, நீங்க ரொம்ப கடினமானவராக இருந்தீங்க. இன்னொரு பக்கம் நீங்க வாழ்வில் மிகக்கடுமையான பாவ வாழ்வில் இருந்து விடுபட்டு வந்திருந்தீங்க. உண்மையிலேயே, அவங்க உங்களை பார்த்த போது, யாரவது உங்ககிட்ட பேச வேண்டிய நிலை இருந்தது, “ராபி, நா உன்ன உற்சாகப்படுத்தறேன். நா உனக்கு உதவி செய்கிறேன்.” அதை பற்றி கொஞ்சம் சொல்லுங்க.

**ராபி கேலட்டி:** ஆமா. நா சபையில் விரும்பத்தகாத ஒருவனாக தான் இருந்தேன். நா போதை பழக்கத்தில் இருந்து விடுபட்டு வந்திருந்தேன், ஹெராயின் கோக்கேயின் போன்றவை. நா ஆறடி ஆறு அங்குலம். 290 பவுண்ட் எடை; நான் தேவனை ஏற்றுகொண்ட பிறகும் கூடா தடையில்லா நிலை என்பதோடு நான் போராடிகொண்டிருந்தேன். இப்ப எல்லாரையும்விட குள்ளமானவர் – அதாவது டேவிட்

பிளாட் 5 அடி உயரம், 5 அடி பத்து அங்குலம் – அவர் என்னிடம் நீ சீஷத்துவ குழுவில் இருக்க விரும்புகிறாயா என்றார். இதுல சுவாரஸ்யம் என்னன்னா, அவர் என்னை வெளிதோற்றப்படி எடைபோடல. அவர் என்னுடைய தோற்றத்தை வைத்து நிதானிக்கள. என்னுடைய வெளிப்புற தோற்றத்தை பார்த்து அவர் என்னிடம் பேசவில்லை, "இந்த ஆளு சீஷத்துவத்துக்கு ஒத்து வர மாட்டான்னு நினைக்கல." இந்த சுவாரஸ்யமான விஷயத்தை தான் நாமளும் நினைவில் கொள்ளனும், அதாவது மற்றவர்களை நாம் வெளி தோற்றத்தை வைத்து மதிப்பிட கூடாது.

எனக்கு இருந்த முதல் சீஷத்துவ குழு எனக்கு நினைவிருக்கிறது. அவர்களில் ஒருவரை நான் சந்தித்த போது அவர் அப்போது சிறைசாலையில் இருந்தார். அவரோட அம்மா என்னை கூப்பிட்டாங்க – அவங்க அந்த சபையின் அங்கத்தினர்- அவங்க எங்கிட்ட சொன்னாங்க, "என்னோட பயன் போதைபொருள் மற்றும் கொள்ளை கூட்டத்தில் இருந்ததற்காக கைதி செய்யப்பட்டு இருக்கான்." என்று சொல்லி, "அவன் சிறையில் இருக்கான், பன்னிரண்டு வருஷமா இருக்கா. அவன்கூட நீங்க பேச முடியுமான்னு கேட்டாங்க. அவனை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன், "தேவன் உன்னை இந்த சூழ்நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்று நம்புகிறேன், நீங்க உங்க வாழ்க்கையை அவருக்கு ஒப்புகொடுக்கனுன்னு சொன்னேன்." தேவனுடைய கிருபையால, அற்புதமாக, அவர் சிறையில் இருந்து விடுதலையானார்.

அவர் எனை சந்திக்க துவங்கினார். இந்த நபர் விரும்பபடாத ஒருவராக தான் இருந்தார். முதல் சந்திப்பில், கேட்டேன், "தேவனை குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அதற்கு அவன், "தேவன் ஒரு ஆற்றலின் சக்தியாக இருக்கிறார் நீங்களும் நானும் எல்லாரும், அந்த ஆற்றலாக இருக்கிறோம்." நா சொன்னேன், "அது, சுவாரஸ்யமாக இருக்கு. இதை எங்கிருந்து கத்துகிட்டீங்கன்னு கேட்டேன். அதற்கு அவர், இதை, நானே கண்டறிந்த ஒரு விஷயம் என்றார். நா சொன்னே, என்னோட, வாழ்க்கையை நா வேதத்தை சார்ந்து நடத்திட விரும்புகிறேன். அவருக்கு நா வேதத்தை பற்றி கற்றுகொடுக்க துவங்கினேன். இன்றைக்கு, அவர் தன்னை ஊழியத்திற்கு ஒப்புகொடுத்திருக்கிறார், ஜான். அருட்பணி

ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து இப்போது தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறார். அதனால, ஒருத்தருக்குள் நீங்க விதைக்கும்போது தேவன் அவர்கள் மூலமாக அற்புதமா செயல்படுவதை பார்க்க முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். கடந்த வார நிகழ்சிகளில் நாம பார்த்த காரியங்களை மறுபடியும் பார்க்கலாமா, நீங்க ஜனங்களுக்கு அழைப்பு கொடுக்குறீங்க, அதற்கு  அவங்களும், "சரி, எனக்கு அதில் சந்தோஷம்னு சொல்றாங்க, சரியா. நீங்க முதல் முறை சந்திக்கும்போது, எங்க சந்திப்பீங்க அப்ப என்ன பேசுவீங்க?

**ராபி கேலட்டி:** சரி. எங்க வேணுன்னாலும் சந்திக்கலாம். அது சபைக்கு வெளியில் இருந்தா நல்லா இருக்கும், சமுதாயத்தில் ஏதாவது ஒரு இடமாக இருக்கலாம். அதை ஒரு காபி ஷாப்ல வைத்துகொள்ளலாம்; ஒரு புத்தக நிலையமாக இருக்கலாம்; மதிய இடைவேளையாக இருக்கலாம்; உங்க அலுவலகத்தில் கூட சந்திக்கலாம். வீட்டிலும் சந்திக்கலாம். நீங்க வீட்டில் இருக்கும் தாய்மாராக இருந்தாலும் வீட்டிலேயே சந்திக்கலாம். ஆனா அது ஒருமணி நேரமாவது இருக்கணும், குறைந்த பட்சம் ஒன்னேகால் மணிநேரம். சேர்ந்து நீங்க வேதத்தை வாசிக்கணும். அதோடு அதை எப்படி செய்யலாம் என்று ஒரு வரைமுறையையும் நா சொல்லியிருந்தேன் அந்த HEAR. நீங்க சேர்ந்து ஜெபிக்கணும். ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கணும். வசனங்களை மனப்பாடம் செய்வதில் ஒருவருக்கொருவர் கணக்கொப்புவிக்க வேண்டும். உங்களுடைய வாழ்வில் எதற்காவது ஜெபிக்க வேண்டியிருந்தால் அதை நீங்கள் ஒருவருக்கொருவர் அறிக்கை செய்யணும், அந்த குழுவில் உள்ள ஒவ்வொருவரும் கணக்கொப்புவிப்பவராக இருக்கணும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இதையும் சொல்லவேண்டியது அவசியமென்று நினைக்கிறேன், நீங்க சொன்னீங்க, வாரத்தில் ஒருமுறையாவது நாம சேர்ந்து ஏதாவது ஒரு இடத்தில் தொடர்ந்து சந்திப்பவர்களாக இருக்கவேண்டும். பல்கலைகழக மாணவர்களுக்கு கண்டிப்பா அவங்க ஒன்று சேரும் இடமிருக்கும், தொழில் செய்பவர்கள் தங்கள் தொழில் இடங்களில் மதிய வேலைகளில் சந்திக்கலாம்; அந்த மதிய உணவின்

வேலையில் அவங்க சரியாக நேரத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டும். மருத்துவர்கள் மருத்துவர்கலோடும், செவிலியர் செவிளியர்கலோடும், ஆசிரியர்களும் அதே மாதிரி செய்யலாம்.... எல்லாருக்குமே மற்றவர்களோடு சேர்ந்து சந்திக்கும்படியான ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்கிறது. நா என்ன சொல்றேன்னு தெரியுமா அந்த நேரங்களில், வாரத்தில் ஒருமுறை, மற்றவர்கள் உங்களை சந்திக்கும்படியாக அழைப்பு கொடுத்திடுங்கள்.

சரி, நீங்க தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும்போது, முதன்மையாக இருப்பது எது? நீங்க சொல்லும்போது, அவங்ககிட்ட நீங்க, முதல் சந்திப்புல சொல்றீங்கள்ள, “பாருங்க, நாம ஒரு குறிப்பிட்ட நாட்கள் வரைக்கும் தொடர்ந்து சந்தித்துக்கொண்டே இருக்க போகிறோம், “இந்த மாதிரி எதிர்காலத்தை பற்றி எப்படி சொல்வீங்க?

**ராபி கேலட்டி:** ஆமா. எங்க திட்டத்தை புரிய வைக்க முயற்சிப்பேன். இதுவரைக்கும் செய்வோம் என்று குறிப்பிட்ட நாட்களை நான் சொல்ல மாட்டேன், ஆனா ஒருகட்டத்தில் அதையும் சொல்லுவேன். இந்த காரியத்தினுடைய முக்கியத்துவம், சீஷத்துவ பயிற்சியின் இலக்கு என்னன்னா, ஒருநாள் இந்த ஆண்களும் பெண்களும் தங்களுடைய வாழ்வை மற்றவர்களுக்குள் பிரதிபலிப்பவர்களாக மாறுவார்கள். அப்ப நீங்க சீஷத்துவத்துல நடத்துகிற நபர் மற்றவர்களுடைய வாழ்வில் தாக்கத்தை உண்டாக்கும் வரைக்கும் சீஷத்துவ பயிற்சி முழுமையடைவதில்லை. அதை அறிந்தும் அதை புரிந்தும் இருப்பதினால், இந்த பயிற்சி முழுவதும் நான் விதையை விதைத்துகொண்டு இருக்கிறேன். அது உடனடியாக துளிர்க்காமல் இருக்கலாம், ஏன்னா ஒருவேளை அந்த குழுவில் இருக்கிறவர்களிடம் நீங்க, “ஹே, கவனிங்கப்பா, இந்த பயிற்சியின் முடிவில் நீங்க ஒருத்தரை வழிநடத்தனும், நீங்க ஒருத்தருக்கு பயிற்சி கொடுக்கணும் என்று சொன்னால், ஒருவேளை அவர்கள், “இதுல எனக்கு ஆர்வம் இல்லை என்று சொல்லலாம்.

ஆனா ஆரம்பத்துலையே நா சொல்லுவேன், நீங்களும் நானும் ஒரு உடன்படிக்கைக்குள்ள வருகிறோம். அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு, நாம ஒருவருக்கொருவர்

கணக்கொப்புவிப்பவராக இருக்கணும். இப்ப, அந்த கட்டத்தில், சிலர் என்ன சொல்வாங்கன்னா, “இது எனக்கு ரொம்ப அதிகம். எனக்கு இதுல விருப்பம் இல்லை.” அவங்கள போக அனுமதிப்பதில் எந்த தவறும் இல்லை, ஏன்னா நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்கன்னா சீஷத்துவத்தில் ஆர்வமுள்ள மக்கள் தான், வளரும் விருப்பம் உள்ளவர்கள், கற்றுகொள்ளும் ஆர்வமுள்ளவர்களை தான் தேடுகிறீர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. வேதாக ரீதியில் எங்களுக்கு விளக்கிடுங்க. அதற்கு 2 தீமோத்தேயு 2:2 தா சொல்றீங்க. அதை விளக்கமாக சொல்லுங்கள், இயேசுவின் வாழ்க்கை பற்றி சொல்லுங்கள், அவர் எப்படி மாதிரியாக இருக்கிறார்.

**ராபி கேலட்டி:** சரி. 2 தீமோத்தேயு 2:2ல், அப்போஸ்தலனாகிய பவுல், தன்னுடைய இறுதிகாலத்தில், தீமோத்தேயுவுக்கு சொல்கிறார், “அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.” அந்த ஒருவசனத்திற்குள்ள நான்கு தலைமுறைகள் சொல்லப்பட்டு இருக்கிறது. பவுல் சொல்றாரு, “நீ ய்ந்நிடத்தில் கேட்டவைகளை, “பவுல் கிட்ட இருந்து தீமோத்தேயு – 1, 2; “தீமோத்தேயுவே, உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி, “ 2 மற்றும் 3; மற்றவர்களுக்கு போதிக்க தக்க மனுஷர்கள், மூன்றாம் நான்காம் தலைமுறை. இது தொடர்ந்து போயிட்டே இருப்பதை பார்க்க முடியும்.

சரி, சிலருடைய கருத்து வேற மாதிரி இருக்கலாம், “இது ஏன் அவ்வளவு முக்கியம்? அதற்கு நாம் இயேசுவின் வாழ்க்கையை தான் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். கற்பனை செய்துபாருங்க நீங்க வீட்டுக்கு போனதும், ஜான், யாரோ ஒருவர் உங்ககிட்ட, நா கேன்சருக்கான தீர்வை கொடுக்க போகிறேன். அதை நா கண்டு பிடித்துவிட்டேன் அந்த தகவலை உனக்கு சொளுகிறேன் என்று சொல்கிறார்கள்.” அந்த தகவலை வைத்து நீங்க என்ன செய்வீங்க? புற்றுநோய்க்கான தீர்வை தெரிஞ்சுக்கிட்டீங்க; இந்த உலகத்தின் நிலையையே உங்களால மாற்ற முடியும். நீங்க தொலைகாட்சி மூலம் தெரிவிக்கலாம், அதை செய்திதாளில் விளம்பரப்படுத்திடலாம், வானொலியில்

தெரியப்படுத்திடலாம், நீங்க என்ன சொல்வீங்க, “புற்றுநோயிக்கான தீர்வை கண்டறிந்திருக்கிறேன், புற்றுநோய்க்கு தீர்வு இருக்கு என்றிடுவீர்கள்.”

சரி, இப்ப கற்பனை செய்யுங்க தேவன் அனந்த ஞானமுடையவர். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது புற்றுநோய்க்கான மாற்றுமருந்து இல்லை, ஆனா பாவத்திற்கான தீர்வு இருந்தது. புற்றுநோய் மற்றும் பாவம் இதிலிருக்கும் பிரச்சனை என்னவென்றால், உங்களுடைய வாழ்க்கையின் முடிவில், புற்றுநோய் சரீரத்தோடு முடிந்துவிடுகிறது, பாவம் நித்தியமாக தொடர்கிறது. அதனால இயேசு முழு உலகத்திற்கும் ஒரு செய்தியை தெரிவிக்கிறார். எனக்கு ஆச்சரியமாக இருக்கும், புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது, இயேசு இந்த பூமியில் இருக்கும்போது ஏ அவர் பின்னால ஒரு பெரிய ஒளிவட்டம் இல்லாமல் இருந்தது இரட்சிப்பு இங்கிருக்கிறது என்ற அம்புகுறி இருந்திருக்கலாமே? அதாவது, அது எல்லாருக்கும் கொஞ்சம் சுலபமாக இருந்திருக்கும்: “வாவ், இங்க தான் இரட்சிப்பு இருக்குன்னு நினைக்கிறேன்! ஏ தேவன் நித்திமான ஒரு மேகபோனை வைத்துகொண்டு இயேசுதான் தேவன் என்று சொல்லல. உண்மையில் அது, மிக எளிதாக இருந்திருக்குமே.

ஆனா இயேசு இந்த முழு உலகத்திற்குமான செய்தியை ஒப்புவிக்க தீர்மானித்தார், மேகங்களிடமோ அல்லது பெரிய ஒலிபெருக்கிகள் மூலமா செய்திடாமல், பன்னிரண்டு மனிதர்களிடம் அதை ஒப்புவிக்கிறார். அவர்களில் ஒருவன் அவருக்கு எதிராக இருந்தான், ஆனா அந்த பன்னிரண்டு பேரால தான், இன்றைக்கு நாம இங்க இருக்கோம். இதை நாம தேவனுடைய முதல் திட்டமாக பார்க்கிறோம். சீஷத்துவ செய்தியை கொண்டு செல்ல வேறெந்த செயற்திட்டமும் சொல்லப்படவில்லை, தேவனுடைய செய்தியை, மீட்பின் செய்தியை அந்த பன்னிரண்டு மனிதர்கள் மூலமாகத்தான் உலகில் எடுத்து செல்லப்பட்டது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஒருமுறை ஒரு குழுவினரை அழைத்துக்கொண்டு வெளிப்படுத்த புத்தகத்தின் ஏழு சபைகளுக்கு சுற்றுலா சென்றிருந்தேன். நாங்க துருக்கி நாட்டின் பகுதிகளுக்கு அருகில் போய் கொண்டு இருந்தபோது, நான் சொன்னேன்,

உங்களை நான் இங்கே இறக்கிவிட்டால்- அதாவது அங்க அப்ப, சுமார் 100 பேர் இருந்தாங்க- அவங்ககிட்ட, “உங்களை நா இங்க இறக்கி விட்டுட்டு இன்னும் 300 வருடங்களுக்கு பிறகு நா திரும்பி வந்தேனா, இந்த முழு பகுதிகளும், ஸ்பெயின்  நாடு வரைக்கும், கிறிஸ்தவராக இருப்பாங்களா?” அதாவது, நீங்க இதை புரிந்துகொள்ளணும் வெறும் 12 பேர் எருசலேமில் இருந்து ஆரம்பித்தாங்க, அங்கிருந்து அவன் ஆசியா முழுவதும் போனாங்க, கிரேக்க சாம்ராஜ்யங்களுக்கு போனாங்க, ரோமாபுரியை கடந்து வந்தார்கள், அங்கிருந்து ஸ்பெயின் நாட்டிற்கு வந்தார்கள். 300 ஆண்டுகளுள் அந்த ராஜ்யமே கிறிஸ்தவமாக மாறினது.

இதை வருவிதமகவும் சொல்ல முடியும், ராபி, இந்த உதாரணத்தை முன்னமே பயன்படுத்தி இருக்கிறோம், அதாவது இயேசுதான் உண்மையான ஜீவ தண்ணீர். ஒரு சிறிய குழாய் அங்கிருந்து வருவதாக வைத்துகொள்வோம் அங்க இயேசுவிடம் ஒரு சிறி குழாயில் இருந்து தண்ணீர் வருகிறது, அதற்கு பிறகு 12 வேறு குழாய்கள் இருக்குது, அதுதான் சீஷர்கள். அவர்களிடம் அந்த தண்ணீரை பகிருந்துகொடுக்கும் படி கட்டளை கொடுக்கிறார். அதனால அந்த குழாய்கள் மூலமாக தண்ணீர் புறப்பட்டு வந்தது. அது மட்டுமில்லை, அது கிட்டத்தட்ட 1900 வருடங்களாக வந்துட்டு இருக்கு, சுமார் 2000 ஆண்டுகள்,ம் உண்மையில், அந்த தண்ணீர் நம்மிடம் வரைக்கும் வந்து சேர்ந்திருக்கிறது. இப்ப, கேள்வி இதுதான், நாம அந்த தண்ணீரை என்ன செய்க்ரிறோம், நம்மூலமாக, நம்மை சுற்றிலும் இருக்கிறவர்களுக்கு பாய்கிறதா, அல்லது தண்ணீரை நாம நிருத்திவிட்டோமா? நாம மற்றவர்களுக்கு அதை பற்றி சொல்லாததால அந்த தண்ணீர் இங்கேயே நாம்மோடு நின்று விட்டதா, யாரையுமே நாம சீஷராக்காம விட்டுட்டோமா?

**ராபி கேலட்டி:** சரி. ஜனங்க எங்கிட்ட கேட்ப்பாங்க, “சீஷத்துவ குழுவில் இருப்பவர்களை நாம் எத்தனை நாட்கள் தொடர்ந்து சந்திக்கவேண்டும்? கிட்டத்தட்ட பன்னிரண்டு முதல் பதினெட்டு மாதங்கள். சில குழுக்கள், சீக்கிரத்தில் கற்றுகொள்வார்கள், அங்க நெருங்கிய ஐக்கியம் உண்டாகும்; சில குழுக்களில் அதிக

நேரம் எடுக்கும். ஆனா கிட்டத்தட்ட 2 வருடங்களுக்கு மேல ஆகுன்னு தான் சொல்லுவேன். காரணம் என்னன்னா, இதன் இலக்கை அவர்கள் புரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும் ஏதோ தகவல்களை பெற்று நிரப்பி கொள்வது கிடையாது, ஆனா அவர்களுடைய வாழ்வில் ஒரு மறுரூபம் ஏற்படும்படியாக நீங்கள் விரும்புகிறீர்கள்.

என்னுடைய முந்தைய சபையை விட்டு நான் இங்க பிரேயினர்ட் சாடனாகோ வந்தபோது, நடந்த சம்பவங்களில் ஒன்று என்ன தெரியுமா, அங்க ஒரு குழுவில் மூன்று பேரோடு இரண்டு வருடங்களாக ஐக்கியம் வைத்திருந்தேன், அவர்கள் என்னோடு திக நெருக்கமாக இருந்தார்கள், என்னை அவங்களுக்கு நல்லா தெரியும், என்னை நேசித்தார்கள், அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நா அங்கிருந்து வந்தப்ப, அவங்களோட உட்கார்ந்து பேசினேன், முதல்ல, தேவன் என்னை சாட்டனாகோ போகும்படி சொல்கிறார் என்றேன். அவங்க கண்களில் கலங்கினது கண்ணீரோடு கேட்டாங்க, “நாங்க என்ன செய்ய போகிறோம்? நீங்க இல்லாமல் என்ன செய்யறதுன்னு எங்களுக்கு எப்படி தெரியும். எப்படி சீஷர்களை உருவாக்குவதென்று எங்களுக்கு தெரியாது. ஒருவரை எப்படி நடத்தனுன்னு தெரியாதுன்னாங்க.” நா அவங்ககிட்ட, உங்களுக்கு தெரியும் என்றேன். நா அங்கிருந்து வருகிறவரைக்கும் அவர்கள் அதை நம்பவில்லை. என்னால அதை மறக்கவே முடியாது, நான் நீங்க வந்து இரண்டு மாதங்கள் கழித்து அவங்க என்னை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார்கள், ராபி, நீங்க இதை நம்பவே மாட்டீங்க. நாங்க மூணு பேருமே இப்ப ஆளுக்கு மூன்று நான்கு பேரை சீஷத்துவத்தில் நடத்துகிறோம் என்றார்கள்.” இப்ப அவங்களுக்கு தெரிஞ்சிடுச்சு. இது இயேசு சொன்னது போலதான் இருந்துச்சு, “கவனி, பேதுரு, உன்னால தண்ணீ மேல நடக்க முடியும். நீ படகை விட்டு இறங்கி முயற்சி செய்தா போதும். அவங்களும் அதைதான் செய்தாங்க. அவங்க படகை விட்டு இறங்கி இப்ப அடுத்தவர்களை குருத்துவத்தில் நடத்தும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். நாம திரும்ப வந்ததும் நேயர்களோடு பகிர்ந்து கொள்ள இருக்கிறது

என்னவென்றால், அவங்க சுயமாக செயல்பட துவங்கும்போது, அது அவர்களுக்கு வைத்தது. அவர்கள் பயிற்சியளிக்கும் மக்களுடைய கதைகளை கேட்கும்போது பிரமிப்பாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையையும் தேவன் பயன்படுத்துகிறார் என நம்ப முடியாது, ஆனா அவங்க சாட்சிகள் சொல்லும்போது ஆச்சரியமாக இருக்கும். அதை குறித்து சில காரியங்களை பார்க்கலாம். சரி, நேயர்களே, இது உங்களுக்கு சம்பவிக்கும் எண்டுதான் சொல்லுகிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள். மீண்டும் சந்திக்கலாம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நமது தேசத்திலுள்ள பிரசித்தி பெற்ற வேதாகம போதகரோடு பேசிகொண்டிருகிறோம், ராபி கேலட்டி. ஜனங்களை சீஷர்களாக உருவாக்குவதில் உள்ள நடைமுறை காரியங்களை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். விசுவாசத்தோடு ஒருவரை நீங்கள் குருத்துவத்தில் நடத்தும்போது, தொடர்ந்து அவர்களை நீங்கள் சந்திக்க வேண்டும், அவர்களுக்கான இலக்கு என்னவென்றால் அடுத்தவர்களுடைய வாழ்வில் தாக்கத்தை உண்டாக்குகிறவர்களாக குழுவில் இருந்து வெளியேறவேண்டும். இயேசுவும் கூட, ராபி, நமக்கு மாதிரியை வைத்திருக்கிறார். அந்த மாதிரியை பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா.

**ராபி கேலட்டி:** இயேசு புதிய ஏற்பாட்டில் மாதிரியை வைத்திருக்கிறார். அவர் துவக்கத்தில் என்ன செய்தார் என்றால்: இயேசு செயல்பட்டார் சீஷர்கள் அதை பார்த்தார்கள். உங்களுக்கு ஞாபகமிருக்குதா, மலை பிரசங்கத்தில் இயேசு போதித்து கொண்டு இருக்கும்போதும், அற்புதங்கள் நடக்க துவங்கியபோதும், இயேசு குஷ்டரோகியை சுகமாக்கும்போதும், பிசாசுகள் பிடித்ஹ்டிருந்த நபரை அவர் குணப்படுத்திய போதும் அவர்கள் அவரை, பார்த்துகொண்டு இருந்தார்கள்.

சீஷத்துவ பாதையின் இரண்டாவது முன்னேற்றப்படி என்னவென்று பார்த்தால்: இயேசு செயல்பட்டார், சீஷர்கள் உதவினார்கள். இயேசு ஐயாயிரம் பேரை போஷித்தது

நினைவிருக்கிறதா. அவர் சீஷர்களுக்கு உணவை பரிமாறுவதற்கும் பிறகு கூடைகளை சேகரிக்கும் வேலையை அவர்களுக்கு கொடுத்தார். இப்ப, அவங்களும் அவரோடு ஊழியத்தில் இடைபட்டு செயல்படுகிறார்கள்.

மூன்றாவது முன்னேற்ற படி: இப்ப சீஷர்கள் செயல்படுகிறார்கள்  இயேசு அவர்களுக்கு உதவுகிறார். மறுரூப மலையின் அனுபவம் நினைவிருக்கிறதா. இயேசு மலையிலிருந்து கீழே இறங்கி வந்தார். அவர் இங்க அந்த காட்சியில் இடையில் வருகிறார், பிசாசு பிடித்திருந்த ஒரு சிறுவன். அவனுடைய தகப்பம் சீஷர்களிடம் வந்து கேட்கிறான், "இவனுக்கு உங்களால எதையாவது செய்ய முடியுமா? இறுதியாக அவர்களால, ஒன்று செய்ய முடியல. இப்ப இயேசு மலையில் இருந்து இறங்கி வருகிறார். அவங்களை எழும்பும்படி சொல்கிறார். அவர் அவனை சுகப்படுத்துகிறார். அதற்கு பிறகு அவரிடம் அவங்க கேட்டாங்க, "எங்களால ஏ அது முடியாம போச்சு? அதற்கு இயேசு சொல்கிறார், "இவ்வகையான பிசாசுகள் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே அன்றி போகாது."

கடைசி முன்னேற்ற படி என்னவென்றால்: சீஷர்கள் செயல்பட்டனர் இயேசு பார்த்துகொண்டு இருந்தார். இப்ப, இன்னொரு குறிப்பு தருகிறேன். இயேசு ஊழியத்தில் வேடிக்கை பார்த்து நிற்கமாட்டார். அவர் சுறுசுறுப்பாக அதில் பங்குபெற்றிடுவார். வேதம் சொல்கிறது அவர் இப்போதும் நமக்காக ஜெபித்துகொண்டு  இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பன்னுகிறார், அதனால நமக்கு தெரியும். ஆனா இயேசு பூமியில் ஊழியம் செய்த கடைசி நாட்களில் கடைசி பகுதியில், சீஷர்களை போகும்படி பெலப்படுத்திவிட்டு அவர் பின்தங்கிவிடுகிறார். அதாவது அவர் 72 பேரையும் அனுப்பி வைக்கிறார், அவர்கள் அவரிடம் திரும்ப வந்து, "இயேசுவே, என்ன நடந்ததுன்னு சொன்னா நீங்க நம்ப மாட்டீங்க. நாங்க பிசாசுகளை  துரத்தினோம்.  உமது நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தோம்." நம்முடைய சீஷத்துவ பயிற்சியில் கூட நாம இந்த படிகளை தான் பயன்படுத்துகிறோம். ஜனங்களை நடத்துகிறோம், மாதிரியாக காட்டுகிறோம், பிறகு அவர்கள் முன்னேறி சென்று அவர்களாகவே செயல்படும்படி அனுப்பி வைக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி.இப்ப நம்முடைய விசுவாசத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதை பற்றி பார்க்கலாம். எப்படியும் நீங்க மற்றவர்களுக்கு எப்படி விசுவாசத்தை பகிர்ந்துகொள்வது என்பதை கற்றுகொடுத்தே ஆகவேண்டும். நீங்க மற்றவர்களை சீஷத்துவத்தில் நடத்தினால், நாம ஏற்கனவே பார்த்தது போல நீங்க முதலாவது சீஷத்துவத்தில் இருந்திருக்கவேண்டும். இந்த காரியம் நேர்த்தியாக நடக்க எல்லா பதிகளுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களை பலபடுத்தும்படி அவரை சார்ந்திருக்க வேண்டும்.

இருந்தாலும், மற்றவர்களோடு இவர்கள் விசுவாசத்தை பகிர்ந்துகொள்கிறார்கள் என்றால், ஒரு தலைவருக்கு கீழ் வருகிறார்கள், குருத்துவராகிரார்கள். அப்ப அவங்க சொல்வாங்க, “சரி, எனக்கு ஓரளவுக்கு வசனங்கள் தெரியும் இதுதான்றது தெரியும் சுவிசேஷத்தை பற்றி தெரியும், அருமையான நற்செய்தியாகிய தேவன் இந்த உலகத்தில் அன்புகூர்ந்தபடியால் தமது தனித்துவமிக்க விலையேறபெற்ற குமாரனை, நாம் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படி கொடுத்திருக்கிறார். எனக்கு அது தெரியும், சரியா. ஆனா இது எப்படி செயல்படும் என்று எனக்கு காட்டும்படி விரும்புகிறேன். ஜனங்கள் பொதுவாக என்னிடம் வந்து கேட்பது நினைவிற்கு வருகிறது, “கவனிங்க, நீங்க செய்வதை நாங்க பார்க்க போகிறோம், சரியா. நீங்க செய்வதை நாங்கள் பார்க்கும்போது அதாவது ஜனங்கள் தேவனை ஏற்றுகொள்வதை பார்க்கும்போது, நாங்களும் அதினால் உற்சாகமடைந்து நாங்களும் அதையே செய்திடுவோம் என்கின்றனர்.”

எனக்கு நல்லா ஞாபகமிருக்குது நா ஜெபித்து கேட்பதுண்டு, ஆண்டவரே, இந்த சூழ்நிலையில் எனக்கு உதவிடும். ஜனங்களை தேவன் பக்கமாக நடத்தியதும் நினைவிருக்கிறது. இது நா பல்கலைகழக மாணவனாக இருந்தபோது நடந்தது. மாணவர் சங்கத்தின் மாணவர்கள் என்னோடு வருவார்கள் நா சொல்வேன், அந்த நபரை தெரிந்துகொள்ளுங்கள் என்பேன். அவங்க மாணவர் சங்கத்தில் உள்ள முரட்டுத்தனமான நபரை தெரிந்துகொள்ளுவார்கள். நாங்க அங்க போவோம். நா சொல்வேன், தேவனே,

உங்களுக்கு தெரியும், எங்களுக்கு உதவிடும்! எல்லா நேரமும் சாதகமாக இருக்காது, ஆனா பெரும்பாலும் நமக்கு சாதகமா இருக்கும். அது மட்டுமல்ல, அவங்க சொல்வாங்க,"சரி, நீங்க செய்றத நாங்க பார்த்துட்டோம். இப்ப நாங்க போகும்போது எங்ககூட நீங்க வாங்க." நீங்க அவங்களோட போவீங்க அவங்க செயல்பட துவங்கிடுவார்கள். சில வேலைகளில் நம்முடைய குருத்துவ பயிற்சியில் ஜனங்கள் அப்படியே பிரதிபலிப்பவர்களாக மாறிடுவார்கள். அவங்ககூடவே ஒருத்தர் இருக்கனுன்னு நினைப்பாங்க. நீங்க செய்வதை பார்க்க நினைப்பாங்க அப்பறம் அவங்க செய்வாங்க. வேற என்னவெல்லாம் அங்க நடக்கும்?

**ராபி கேலட்டி:** சரி, இதெல்லாம் புள்ளி விபரங்களோடு இணைந்திருக்கிறது என நினைக்கிறேன். சமீபத்திய புள்ளி விபரங்களின் அறிக்கைபடியாக தற்போது 75 சதவிகித சபை அங்கத்தினர்கள், தனங்களே ஒப்புகொள்ளுகிற, ஒரு விஷயம் அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் அவர்கள் மந்தமாக அசைவில்லாமல் இருக்கிறார்கள். இதற்கான காரணங்களில் ஒன்று என்னவென்றால்: சபைக்கு வருவதுதான் இறுதியான நிலை என்று எண்ணிகொள்ளுகிறோம். அதனால ஜனங்க நினைக்கிறாங்க, "நா சபைக்கு வந்தா போதும் ஞாயிற்று கிழமை போய் அட்டண்டண்ட்ஸ் கொடுத்துட்டா, அதுவே போதும்." மேலும் நாமும் கூட ஜனங்களுடைய கரத்தை பிடித்து அவர்களோடு சீஷத்துவ பயிற்சி நிலையில் நடத்தி செல்ல வில்லை.  தங்களை தாங்களே எப்படி போஷிப்பது என்பதை கற்றுத்தராமல் இருக்கிறோம்.

இது அருமையான காரியமென்று தோன்றிகிறது, ஜான். ஜனங்களுக்கு சாட்சி கொடுத்து கிறிஸ்துவை பற்றி சொல்லும்படி கற்றுத்தருவதோடு நின்றுவிடாமல், அதற்கு அப்பாற்பட்ட நிலையில் மாதிரியாக இருந்து காட்டவேண்டும். தேவனுக்காக எப்படி பரிசுத்தமாக வாழ்வது என்பதை அது குறிக்கிறது. உங்களுடைய கணவர் அல்லது மனைவியை நடத்துவது போல இருக்கிறது. பிள்ளைகளை எப்படி வளர்ப்பீர்கள் என்பதை போன்றது. ஒவ்வொருநாளும் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுக்கு எப்படி வாழ்வது என்பது போன்றதாகும். எனவே, சாட்சி பகர்வதைவிட இந்த மாதிரியாக

இருந்துகாட்டுதல் மிக முக்கியமானது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இதெல்லாம் வாழ்வின் எல்லா  பகுதிகளையும் காணும் கண்ணோட்டமாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, நா நினைக்கிறேன், ராபி, இந்த தேசத்திலும் உலகம் முழுவதிலும் இதை நிறைய சபை மக்கள் உட்கார்ந்து பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். யோசித்து பாருங்க, சுமார் 50% மக்கள் இப்பவே களத்தில் இறங்கினார்கள் என்றால், தங்கள் ஸ்தானத்தை விட்டு எழுந்து, காலத்துல இறங்கினாங்கன்னா,  வாரத்தில் ஒருநாள் சிலரை கூப்பிட்டு சந்திக்க ஆரம்பித்தாள், வெறும் ஒருமணிநேரம், வாரத்துல ஒருநாள் மட்டும், சேர்ந்து அவங்க தேவனுடைய வார்த்தைகளை வாசிக்க துவங்கினால், ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக இருந்தால், ஜெபிக்கக துவங்கினால், அவர்கள் போய் மற்றவர்களை சீஷராக்கணும் மற்றவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தனுன்னு  தெரிஞ்சுக்கிட்டா எப்படியிருக்கும். ஆல்ரைட். சபைகளை அந்த மாதிரி கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

**ராபி கேலட்டி:** ஆமா. அங்க தா நாம போகணும் ஜான். பாரம்பரியமான, மாதிரி இதுதான், “நாம எல்லாத்துலையும் கவனம் செலுத்தனும், கட்டிடங்கள், செலவுகள்.” அதாவது நல்ல சபை கட்டிடம் இருந்தா வெற்றிகரமான சபை என்று நினைக்கிறோம், அல்லது சிறந்த பொருளாதார நிலை இருந்தால் வெற்றிகரமான சபை என்கிறோம். அல்லது லட்சக்கணக்கான மக்கள் வரவேண்டும் என்று நினைக்கிறோம். ஆனா பிரைனர்ட்ல நாங்க தெரிஞ்சுகிட்டது என்னன்னா: சபையை ஒருமைல் தூரத்திற்கோ அல்லது ஒரு இன்ச் அகலமாகவோ வளர்க்க நாங்க விரும்பவே இல்லை. ஆழமான வளர்ச்சி வேண்டுமென்று இருக்கிறோம். ஜான் மெக் ஆர்தர் தனது ஊழியத்தின் ஆரம்பத்தில் தேவனிடம் சொன்ன கூற்று என் நினைவிற்கு வருகிறது. அவர் சொன்னார், “தேவனே, நான் ஆழத்தின் மீது கவனம் செலுத்துகிறேன். நீங்க அகலத்தின் மீது கவனமாக இரும்.” விசுவாசிகளாக இதுதான் நம்முடைய மனதில் இருக்கவேண்டும்,

தனிநபர்கள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும், ஜனங்கள் தேவனுடைய ஜீவனை புரிந்துகொண்டு ஆழமான உறவில் வளரவேண்டும்.

பல வருடங்களுக்கு முன்பு இயேசு கிறிஸ்து சொன்னதுபோல, “புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்க வேண்டும்.” அந்த கோல் கர்த்தராகிய இயேசு கிரிஷ்டுவிடம் இருந்து அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் அதை ஆதிகால திருச்சபையின் பிதாக்களிடம் ஒப்படைத்தனர். பல நூற்றாண்டுகளாக அது மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த கோல் இன்னமும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. மேலும் இன்றைக்கு, அந்த கோல் நம்முடைய கரங்களில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு உங்களை ஒரு சவால் வைக்கிறேன், உங்கள் கரத்தில் உள்ளதை பாருங்கள். அந்த கோல் உங்களுடைய கரங்களில் கொடுக்கபப்ட்டு இருக்கிறது. கேள்வி என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக உங்கள் வாழ்வின் இறுதியில் நீங்கள் நிற்கும்போது என்ன நடக்க போகிறது, மகா ராஜாவை சந்திக்க இருக்கிறோம், இந்த தேவசத்தின் ராஜாத்தியாக அல்ல, இந்த பிரபஞ்சத்தின் ராஜாவை சந்திக்கிறோம் – அந்த கொலை கொடுப்போமா? அவர் நம்மை பார்த்து சொல்லமுடியுமா, “நல்லது, உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே?

எனக்கு தெரியும் இன்றைக்கும் சீஷத்துவத்தில் நடத்தும்படியாக நிறைய ஜனங்கள் காத்துகொண்டு இருக்கிறார்கள். நேயர்களை நான் ஊக்குவித்து சவாளிடுகிறேன்: நீங்க இந்த நாட்களில் உங்களோடு சீஷத்துவ உறவை ஏற்ப்படுத்திகொள்ளும்படி உங்கள் அருகில் ஆவலாக யார் காத்துகொண்டு இருக்கிறார்கள் என்று பார்க்க முடியுமா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப, நேயர்களே, நீங்க சீஷத்துவத்தில் இருக்க விரும்பினால், நீங்க கனப்படுத்தும் ஒருவரிடம் கேளுங்கள், உங்களுக்கு உதவ முடியுன்னு நினைக்கிரவங்களிடம் போங்க. உண்மையில், பிரியமானவர்களே, உங்களால யாரையும் கண்டுபிடிக்க முடியலைன்னா, இரண்டு மூன்று கிறிஸ்தவர்களோடு சேர்ந்து தேவ வார்த்தைக்கும் கீழ்படிய வேண்டும் என்ற நோக்கத்தோடு அர்ப்பணித்து, நீங்க அடிக்கடி ஒன்று கூடிஜெபிக்கவும் ஒருவருக்கொருவர் கணக்கொப்புவிப்பவராக இருக்கவும்

பிரயாசப்படுங்கள். இதை பரிசுத்த ஆவியாகிய தேவன் மேற்ப்பார்வையிட்டு உங்களை நடத்திடுவார் என்று நான் விசுவாசிக்கிறேன். என்னுடைய விசுவாசத்தில் நான் வளர்ந்துவந்தது எனக்கு நினைவிருக்கிறது, உண்மையில், எனக்கும் யாருமே வழிநடத்தும்படி இருந்தது கிடையாது. அது நாங்கள சேர்ந்து கொண்ட ஒரு குழுவாகத்தான் இருந்தது. ஒருவருக்கு ஒருவர் கணக்கொப்புவிப்பவராக இருந்தோம், தேவன் எங்களுக்கு கற்றுத்தந்தார், தேவன் எங்களில் கிரியை செய்தார், அவர் எங்கள் உண்மையை பார்த்து நடத்தினார். நாங்கள் விசுவாசத்தில் வளர்ந்தோம். இதுவும் நடக்க வாய்ப்புண்டு.

நா  என்ன சொல்றேன்னா, நீங்க கிறிஸ்தவராக இருந்தால், உங்களோடு சேர்ந்து சந்திக்க யாருக்காவது அழைப்பு குடுங்க, தேவன் உங்களை பயன்படுத்தும்படி தைரியமா அடியெடுத்து வைங்க. உங்களால நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு நீங்க நடத்தும்படியான ஜனங்கள் நிறைய பேர் வெளியில் இருக்கிறார்கள், தேவனுக்கு உங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தால் போதும், “உமக்கு நான் கீழ்படிகிறேன் என்று சொல்லுங்கள்.”

ராபி, இந்த தகவல்கள் அனைத்தையும் எங்களோடு பகிர்ந்துகொண்டதற்காக உங்களுக்கு நன்றி. மற்றவர்களை எப்படி சீஷத்துவத்தில் நடத்துவது என்பதை அநேக மக்களுக்கு கற்றுகொடுத்து நல்ல குருத்துவராக இருப்பதற்காக உங்களுக்கு நன்றி சொல்கிறோம். சரி நேயர்களே, அடுத்த வாரம் நிகழ்ச்சியில் என்னோடு இணைந்திடுவீர்கள் என்று நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.